


செங்கல்பட்டு மாவட்டம் பொத்தேரி எஸ்.ஆர்.எம்.பல்கலைக் கழகத்தில் தென்னிந்திய தொழில் வர்த்தக அமைப்பும் (SICCI) மற்றும் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகமும் இணைத்து நடத்தும் தேசிய அளவிலான மனிதவள தொழில் உறவு மாநாடு மற்றும் விருதுகள் வழங்கும் விழாவில் குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்து விருதுகளை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், நகர்மன்ற தலைவர்கள் ஜெ.சண்முகம், எம்.கே.டி.கார்த்திக், மனித வள மேம்பாட்டு குழுத்தலைவர் முனைவர் ரத்தினவேல் ராஜன், தென்னிந்திய தொழில் வர்த்தக சபை துணைத்தலைவர் வி.என்.சிவ சங்கர், தென்னிந்திய தொழில் செயலாளர் வினோத் சாலமன். பேராசியர் பொன்னுசாமி மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.



உதகை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிகளை கழக துணை பொதுச்செயலாளரும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா பார்வையிட்டார். உடன் சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், மாவட்ட கழக செயலாளர் பா.மு.முபாரக், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், செந்தில், உதகை நகர செயலாளர் ஜார்ஜ், பொதுக்குழு உறுப்பினர் சதக்கத்துல்லா, உதகை நகர பொருளாளர் அனில்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் உள்ளனர்.

### தமிழ்நாடு முழுவதும்

# 1000 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் ஆய்வு செய்தார்!

சென்னை, நவ. 5 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு முழுவதும் 1000 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் வாரம் ஒருநாள் என்ற வகையில் தொடர்ந்து 10 வாரங்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 2வது வாரமாக நடைபெறும் முகாமை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முகாமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (04.11.2023) சென்னை, அடையாறு, மல்லிப்பூ நகர் பகுதியில் நடைபெறும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

வடகிழக்கு பருவமழையையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கடந்த அக்டோபர் மாதம் 29ம் தேதி தொடங்கி வருகிற டிசம்பர் இறுதி வரை 10 வாரங்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மெகா மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி கடந்த 29ஆம் தேதி ஒரு மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. ஆயிரம் இடங்களில் மருத்துவ முகாம் என்று அறிவிக்கப்பட்டு 1,943 இடங்களில் அந்த முகாம்கள் நடத்தப்பட்டது.

கடந்த வாரம் நடத்தப்பட்ட அந்த முகாம்கள் மூலம் 1,04,876 பேர் மருத்துவ பயன்பெற்றார்கள். இந்த நிலையில் மருத்துவ சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும், பொது மக்களும் ஒரு கோரிக்கை விடுத்தார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் மருத்துவ முகாம்கள் நடத்தடப்படும்போது, அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை தீபாவளி பண்டிகை இருக்கிறது.

எனவே, அதைத் தவிர்த்து சனிக்கிழமைகளில் நடத்தலாம் என்கின்ற வகையிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் மருத்துவ முகாம்கள் நடத்தும்போது மருத்துவர்களுக்கும், அந்த துறை பணியாளர்களுக்கும் வேறு ஒரு நாள் விடுப்பு அளிக்க வேண்டியிருக்கிறது. எனவே, வேலை நாளில் மருத்துவ பணிகள் பாதிப்பு ஆக வாய்ப்பு அதிகமாக இருக்கிற காரணத்தினால் சனிக்கிழமைகளிலேயே இந்த மருத்துவ முகாம்கள் நடத்தலாம் என்று அறிவிக்கப்பட்டது.

மேலும், மருத்துவத் துறை வரலாற்றில் வடகிழக்கு பருவ மழையின் போது மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் இதற்கு முன்னாலும் நடத்தப்பட்டு இருக்கிறது என்றாலும் ஒவ்வொரு வாரமும் ஆயிரம் முகாம்கள் என்கின்ற வகையில் தொடர்ச்சியாக 10 வாரங்கள் நடத்தப்படுவது என்பது இதுவே முதல் முறை, காரணம் ஏராளமான மருத்துவக் கட்டமைப்புகள் தமிழ்நாட்டில் இருந்தாலும், மக்கள் எளிதாக தங்களுடைய வீட்டு அருகிலேயே இந்த மருத்துவ முகாம்களை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்கின்ற வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு இந்த முகாம்கள் நடைபெற தொடங்கியிருக்கிறது.

அந்த வகையில் நவம்பர் 4ஆம் தேதி இன்று தமிழ்நாட்டில் ஆயிரம் இடங்களில் இந்த மருத்துவ முகாம்கள் தொடங்கியிருக்கிறது. நவம்பர் திங்களைப் பொறுத்த வரை 4ம் தேதியும் அடுத்த வாரம் 11 ஆம் தேதியும் அதற்கு அடுத்து 16 ஆம் தேதியும், அதற்கு அடுத்து 25ம் தேதியும் ஆக இந்த மாதம் மட்டும் நான்கு வாரங்கள் இந்த மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. தொடர்ந்து அடுத்த டிசம்பர் மாதம் பொருத்த வரை 2ஆம்தேதி, 9ஆம் தேதி, 16ஆம் தேதி, 23ஆம் தேதி, 30 ஆம் தேதி என்கின்ற வகையில் 5வாரங்கள் அடுத்த மாதம் நடத்தப்படவிருக்கிறது, ஆக இன்னமும் 9 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட விருக்கிறது. எனவே, தமிழ்நாட்டில் காய்ச்சல் பாதிப்பு உள்ளவர்கள், சளி தொல்லை உள்ளவர்கள், வறண்ட தொண்டை இருமல், சேற்றுப்புண் போன்ற பல்வேறு மழைக்கால உபாதைகள் உள்ளவர்கள் இந்த மருத்துவ முகாம்களை அணுகி பயன்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

அந்த வகையில் இந்த முகாம்கள் என்பது பெரிய அளவில் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதப்படுகிறது. இந்த முகாம்களை பொறுத்த வரை 476 நடமாடும் மருத்துவ குழுக்கள் ஈடுபடுத்தப்படவிருக்கிறது. 805 பள்ளி சிறார்களுக்கான மருத்துவ குழுக்கள் (RBSK) மூலம் பள்ளிகளில் காய்ச்சல் கண்டறியும் முகாம்கள் நடத்தப்பட்டு பள்ளி மாணவர்களுக்கும் பரிசோதனைகள் என்கின்ற வகையில் இது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மழைக்காலங்களைப் பொறுத்தவரை டெங்கு, மலேரியா, சிக்கன் குனியா, டயேரியா, சேற்றுப்புண் போன்ற பல்வேறு நோய் பாதிப்புகளிலிருந்து மக்களை உடனடியாக மீட்பதற்குரிய நடவடிக்கைகளாக இந்த முகாம்கள் பெரியளவில் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது.

**டெங்கு**

டெங்கு கண்டறியப்பட்ட நாள் முதல் இது வரை எந்த வருடமும் மூன்று இலட்சம் அளவுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதில்லை. ஆனால் இந்த ஆண்டு ஜனவரி திங்கள் 1ஆம் தேதி முதல் இது வரை 3,13,648 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதுவரை 6169 நபர்கள் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தற்போது 598 பேர்கள் வீடுகளிலும், மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். நேற்றைக்கு மட்டும் 60 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 26721 பேர் டெங்கு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.தமிழக அரசைப் பொறுத்தவரை Fogging Machine - 16,005 இயந்திரங்கள் கையிருப்பில் இருக்கிறது. Temephos என்று சொல்லக்கூடிய கொசு மருந்து - 45353 லிட்டர் கையிருப்பில் இருக்கிறது. Pyrethrum என்று சொல்லக்கூடிய மருந்து 62332 லிட்டர் கையிருப்பில் இருக்கிறது. Technical Malathion என்று சொல்லக்கூடிய மருந்து 11597 லிட்டர் கையிருப்பில் இருக்கிறது. எனவே போதுமான அளவுக்கு மருந்தும் கையிருப்பில் இருக்கிறது. இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளிலும், தடுப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதற்குரிய பணியாளர்களும் தயார் நிலையில் இருக்கிறார்கள்.

**ஜிகா வைரஸ்**

தமிழ்நாட்டை பொறுத்தவரை இன்றைக்கு இன்னமும் ஒரு புதிய காய்ச்சலுக்குரிய வைரஸ் அறிகுறிகள் வருமோ என்கின்ற அச்சமும் மக்களிடத்திலேயே பரவத் தொடங்கியிருக்கிறது. மேலும், கர்நாடகா மாநிலத்தில் ஜிகா வைரஸ் கண்டறியப்பட்டிருக்கிறது. இந்த ஜிகா வைரஸ் என்பது, டெங்கு உருவாக்குகிற ஏடிஸ் கொசுக்களின் மூலமே பரவக்கூடிய ஒரு வகை வைரஸ் காய்ச்சல் ஆகும். இந்த ஜிகா காய்ச்சலைப் பொறுத்தவரை உலகம் முழுவதும் 22 நாடுகளில் பரவத் தொடங்கியிருக்கிறது. மேலும், காய்ச்சல், தலைவலி, உடல்வலி, சிவப்பு தடிப்புகள் (rashes) போன்ற அறிகுறிகள் இருந்தால் மக்கள் சுய மருத்துவத்தை தவிர்த்து மருத்துவரை அணுகி சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்த ஜிகா வைரஸ் பாதிப்பு என்பது கருவிலிருக்கும் குழந்தைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டால் மூளை பாதிப்பு மற்றும் சிறிய தலையுடன் குழந்தை பிறக்க வாய்ப்புள்ளது.எனவே இந்த பாதிப்புகளுக்கான அறிகுறிகள் குறிப்பாக மழைக்காலங்களில் வருகிற அது எந்தவிதமான நோய், காய்ச்சல் பாதிப்பாக இருந்தாலும் உடனடியாக மருத்துவர்களை அணுக வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது. ஜிகா வைரஸ் காய்ச்சல் ஜிகா வைரஸ் காய்ச்சல் 2 முதல் 7 நாட்களுக்குள் குணமாகிவிடும். மருந்து மாத்திரைகள் மூலம் எளிதில் குணப்படுத்தி விடலாம். இதில் மரணங்கள் ஏற்பட வாய்ப்பு மிக மிக குறைவு தான். இந்த காய்ச்சல் மேலை நாடுகளில் அதிகம் காணப்படுகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை கர்நாடகாவில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த தகவல் தெரிந்தவுடன் நம்முடைய பொது சுகாதாரத் துறை, இது மனிதர்களை பரிசோதிக்கும் நோய் அல்ல, இது கொசுக்களைப் பரிசோதிப்பதின் மூலமே இந்த ஜிகா வைரஸ் பாதிப்பு தெரிய வரும். அந்த வகையில் இது வரை 64 கொசுக்களிடமிருந்து இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இந்த ஆய்வுகள் மூலம் தமிழகத்தில் ஜிகா பரவல் இல்லை என்பது உறுதிபடுத்தப் பட்டிருக்கிறது. எனவே, மக்கள் பெரிய அளவில் அச்சப்படவேண்டிய அவசியம் இல்லை. மேலும், இன்று நடைபெறும் மருத்துவ முகாம்களை மக்கள் பெரியளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் அசன்மௌலானா, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மண்டல குழுத் தலைவர் துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (04.11.2023) சென்னை, அடையாறு, மல்லிப்பூ நகர் பகுதியில் நடைபெறும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் அசன்மௌலானா, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மண்டல குழுத் தலைவர் துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியத்தில்

# மாற்றுக் கட்சியினர் தி.மு.க.வில் இணைந்தனர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலை!

நாமக்கல் மேற்கு மாவட்டம் பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியம் ஒன்றிய கழக செயலாளர் இளங்கோவன் ஏற்பாட்டில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் முன்னிலையில் பாப்பம்பாளையம் அதிமுக கிளை செயலாளர் ரமேஷ் தலைமையில் மணிவண்ணன், திலகவதி, லட்சுமணன், பிரகாஷ் மூர்த்தி, தீபக், பழனியப்பன், சரவணன், ஜியாவுல்லா, குணால், தேவிகா, சாவின், வார்டு உறுப்பினர்கள் ஸ்ரீதர் சரவணன் உள்ளிட்ட 100 க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக செயலாளர் எஸ். எம்.மதுரா செந்தில் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ரமேஷ், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் குமார், விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் முருகேசன், ஜான்சன், வின்சன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோட்டில் மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பாக நீட் தேர்வினை ரத்து செய்திட ஒன்றிய அரசினை வலியுறுத்தி மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மல்லை ஜி.ஜெகதீஷ்குமார் தலைமையில் திருச்செங்கோடு அரசு பெண்கள் மேல்நிலை பள்ளி முன்பு மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள், பொதுமக்களிடம் நீட் தேர்வு எதிர்த்து கையொப்பம் பெறப்பட்டது. இந்நிகழ்வில் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஆர். கௌதம், துணை ஒருங்கிணைப்பாளர் சேக்மீரான், அயலக அணி அமைப்பாளர் சாதிக், ஆதி திராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் பிரபு, பொறியாளர் அணி துணை அமைப்பாளர் கௌதம், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சிபி(ஏ) சிப்ரேஸ், சிலம்பரசன், கவின் மற்றும் பாலாஜி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை மு. சுலைமான்

**நவம்பர் 5 (1983)**



**தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**கோவை மாவட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.**

**நெருக்கடி காலத்தில் மிசா சட்டம் அமல்படுத்தப்பட்ட போதும், தைரியமாக முரசொலி முகவராக பணியாற்றியவர்.**

**கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனராக பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**